
பக்கங்கள் 21+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 07 புதன்கிழமை 23.07.2024 | அதிர்வு 354

## இந்த வருடம் இதுவரை 73 துப்பாக்கிச்சூடுகள்!

### 38 பேர் சாவு; 43 பேர் காயம்



இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் இலங்கையில் 73 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள்

06▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# கறுப்பு ஜூலை படுகொலை நினைவேந்தல் தாயகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

## தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றி யாழ். பல்கலைக்கழகத்தில் நினைவுரை

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

இலங்கை அரசால் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட கறுப்பு ஜூலை படுகொலையின் 42 ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் இன்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

06▶





# அவசரகாலச் சட்ட விதிமுறைகளால் அடிப்படை உரிமையை மீறிய ரணில்

## உயர்நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி அரகலய போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்துவதற்காக அப்போதைய பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்ட அவரசகாலச் சட்ட விதிமுறைகளினால் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று உயர்நீதிமன்றம் இன்று புதன்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

இதற்கமைய பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆவது விதிமுறையின் கீழ் பிரகடனப்படுத்திய அவசரகாலச் சட்ட விதிமுறைகள் தன்னிச்சையானதும்



அதிகாரமற்றதுமான செயற்பாடு என்று மூன்று நீதியரசர்களைக்

06▶



# அம்பாறையில் காதலியைக் கழுத்தறுத்து கொலை செய்த காதலன் தானும் தற்கொலை

## பெண்ணின் பெற்றோர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

(பாறுக் ஷிஹான்)

இளம் பெண்ணைக் கழுத்தறுத்துக் கொலை செய்து அவரது பெற்றோரை வெட்டிப் படுகாயப்படுத்திய இளைஞர் தனது கழுத்தை அறுத்து தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தப் பயங்கரச் சம்பவம் அம்பாறை மாவட்டம்,பதியத்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரங்கல பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற் றுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த இளம் பெண், அவரது காதலன் எனக் கூறப்படும் இளைஞரால் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டுள்ளதுடன் பின்னர் காதலனும் தனது கழுத்தை அறுத்துத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் தனது காதலி எனப்படும் இளம் பெண்ணின் வீட்டுக்குப் பிரவேசித்த இளைஞர், அந்தப் பெண்ணைக் கொலை செய்துவிட்டு பெண்ணின் தாய் மற்றும் தந்தை மீதும் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த தாயும் தந்தையும் தற்போது மஹாஓயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொலை செய்யப்பட்டவர் 23 வயதான சரோஜா உதயங்கனி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொலையைச் செய்த இளைஞர் மொனராகலை பகுதியைச் சேர்ந்தவர் என ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பதியத்தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# பெண்ணொருவரின் கழுத்தை அறுத்து கொலை செய்த நபர் பொலிஸில் சரண்

## நாவலப்பிட்டியில் சம்பவம்

(க.கிஷாந்தன்)

கண்டி, நாவலப்பிட்டி, இம்புல்பிட்டிய தோட்டத்தில் உள்ள பாழடைந்த பங்களாவுக்குள் பெண் ஒருவரின் கழுத்தை அறுத்துப் படுகொலை செய்த நபர், கம்பளை பொலிஸில் நேற்று சரணடைந்த நிலையில், மேலதிக விசாரணைக்காக நாவலப்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி, இம்புல்பிட்டிய தோட்டத்தைச் சேர்ந்த 39 வயதான மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட பெண், சந்தேகநபருடன் கம்பளை, புசல்லாவை பகுதியில் 9 மாதங்களாக வசித்து வந்துள்ளார் எனவும், நேற்று தனது சட்டபூர்வ கணவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார் எனவும், அங்கிருந்து மேற்படி நபருடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பெண் வீட்டு வேலைக்காக வெளிநாடு செல்லத் திட்டமிட்டிருந்தார் எனவும், அதற்குக் கள்ளத் தொடரைப் பேணிய நபர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தார் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி பெண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்திய சந்தேகநபர் நேற்று முன்தினம் பாழடைந்த பங்களாவுக்குள் அவரை அழைத்துள்ளார். அவ்வாறு சென்ற வேளையிலேயே கழுத்தை அறுத்துக் கொலை செய்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# திருமலையில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் மரணம்!

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுமேதங்கபுர எனும் பகுதியில் வைத்து யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மூதூர் - மல்லிகைத்தீவச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான தம்பி ராசா வர்ணகுரரெட்ணம் (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தோப்பூர் -நாராயணபுரத்தைச் சேர்ந்த யோகராசா (வயது 46) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி நபர்கள் சேருநுவர பொலிஸ் பிரிவில் உள்ள மாங்குளம் என்ற பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுவிட்டு தங்களுடைய வீட்டுக்குத் திரும்புகையிலேயே யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் சேருவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டு உடற்கூற்றுபி பரிசோதனைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் படுகாயமடைந்தவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெல்லவாயவிலும் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு!

மொனராகலை - வெல்லவாய, ரந்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காட்டு யானை தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ரந்தேனியவைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 58 வயது நபரே உயிரிழந்துள்ளார்.

இவர் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது வீதியில் இருந்த காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# சம்பூரில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள்: ஜூலை 30ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குக!

## சட்ட வைத்திய அதிகாரிக்கும் தொல்பொருளியல் திணைக்களத்துக்கும் மூதூர் நீதிபதி இன்று உத்தரவு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டம், மூதூர், சம்பூர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக எதிர்வரும் 30ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கும், தொல்பொருளியல் திணைக்களத்துக்கும் மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி.தஸ்னீம் பௌசான் உத்தரவிட்டுள்ளார்.

அந்தப் பகுதிக்கு இன்று புதன்கிழமை விஜயம் மேற்கொண்டு கள ஆய்வை மேற்கொண்டிருந்த நீதிபதி, அங்கு வருகை தந்திருந்த திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.



இதன்போது சட்ட வைத்திய அதிகாரிக்கு அந்த இடத்தில் அகழ்வுப் பணியை முன்னெடுப்பது தொடர்பாக மிதிவெடி அகற்றும் நிறுவனத்துடன் கலந்துரையாடி அறிக்கை சமர்ப்பிக்குமாறும், தொல்லியல் திணைக்களத்திடம் அந்த இடத்தில் மயானம் இருந்ததா என்பது தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்ட நீதிபதி, குறித்த அறிக்கைகளை இரு தரப்பினரும் எதிர்வரும் 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப் பிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அந்த இடத்துக்கு அரச பகுப்பாய்வுத் திணைக்களம், சட்ட வைத்திய அதிகாரி, தொல்பொருள் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் காணாமல்போனோர் அலுவலகம், குற்றவியல் தடய காட்சிகள் அலுவலகம் ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் இன்று வருகை தந்திருந்தனர்.

சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோரபி பகுதியில் ஆயுபு என்ற மிதிவெடி அகற்றும் நிறுவனம் மிதிவெடி அகற்றுவதற்கான அகழ்வுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்தப் பகுதியில் இருந்து சிதைந்த மனித மண்டையோடு மற்றும் எலும்புப் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. அதையடுத்து மூதூர் பதில் நீதிவானின் உத்தரவுக்கலாமிய அகழ்வுப் பணிகள் இன்று வரை இடைநிறுத்தப்பட்டிருந்தன.





# வவுனியாவில் ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவம்: வீட்டு உரிமையாளர் உட்பட இருவர் சிக்கினர்!

(கி.வசந்தன்)

கொழும்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் வவுனியாவில் ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவத்தில் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரவு பொலிஸார் தெரிவித்தனர்.



நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் ஆயுதத்துடன் கைது செய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் வவுனியாவில் இரு வீடுகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, 86 கைக்குண்டுகள், ரி – 56 ரக துப்பாக்கிக்கான ரவைகள், கைத்துப்பாக்கிக்கான மூன்று ரவைகள், 5600 போதை மாத்திரைகள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன நிலத்தின் கீழ் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலி ஸார் மேலும் தெரிவித்தனர்.

# திருக்கோவில் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் நாளை!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற திருக் கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடிஅமாவாசை தீர்த்தோற்சவம் நாளை (24) வியாழக் கிழமை சமுத்திரத்தில் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தெரி வித்தார்.

இந்த ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா கடந்த 07 ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெற்றது.

தொடர்ந்து 18 நாள்கள் திருவிழாக் கள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண் முகமகேஸ்வரக்குருக்கள் முன்னி லையில் ஆலயகுரு சிவஸ்ரீ நீதி. அங்குச நாதக்குருக்கள் தலைமையில் பகல் இரவு திருவிழாக்களாக இடம் பெற்று வருகின்றன.

தீர்த்த தினம் முன்னோர்களுக்கான பிதிர்க்கடன் செலுத்தும் முக்கியமான கிரியை அங்கு நடைபெறுவது வழமை யாகும்.

தீர்த்தம் இடம் பெற்று மறுநாள் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்கா வனத்திருவிழாவான வள்ளி திரு மணமும் நடைபெறும்.

தொடர்ந்து மறுநாள் 26 ஆம் திகதி வைரவர் பூஜையுடன் மகோற்சவம் நிறைவடையவுள்ளது.





## கறுப்பு ஜூலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தவகையில் யாழ்ப்பாணம் பல் கலைக்கழகத்தில் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தின் பிரதான வளா கத்தில் அமைந்துள்ள சுற்றுவட்டத்தில் வைக்கப்பட்ட கறுப்பு ஜூலை நினைவுருவப் படத்துக்கு மாணவர்களால் அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத் தப்பட்டது.

இதன்போது 1983 கறுப்பு ஜூலை வாரத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான நினைவுரையும் இடம்பெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர் கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## இந்த வருடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்க ளின் போது 38 பேர் உயிரிழந்துள்ளதுடன் 43 பேர் காயமடைந்துள்ளனர்.

அதிகளவான துப்பாக்கிச்சூட்டுச் சம்ப வங்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 24 துப்பாக்கிதாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, இந்தத் துப்பாக்கிச்சூட் டுச் சம்பவங்களுக்கு உதவி செய்த குற்றத்துக்காக 150 பேரும், மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திய குற்றத்துக் காக 15 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு தீர்ப்ப ளித்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தினர், இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சத்குணநாதன், லிபரல் இளைஞர் இயக்கத்தினர், மனித உரிமை ஆர்வலரான வழக்கறிஞர் அதாம் லெப்பே ஆசாத், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சிலுடன் பணிபுரியும் சர்வதேச மனித உரிமை ஆர்வலரான லக்ஷ்மணன் சஞ்சீவ் ஆகியோர் இந்த அடிப்படை உரிமைகள் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பொலிஸ்மா அதிபர் நியமனம்

தற்போது பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பெரும்பாலும் பதவி விலக்கப்படுவதற்கான சாத்தியங்கள் நெருங்கி வருகின்றன. அவருக்கு எதிராக நாடாளுமன்றம் நியமித்த மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழு அவரைக் குற்றவாளியாகக் கண்டிருக்கின்றது. அதன் அடிப்படையில் அவருக்கு எதிரான பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் அவர் பதவியை இழந்தவராகிவிடுவார்.

அந்தச் சூழ்நிலையில் அடுத்த பொலிஸ்மா அதிபர் யார் என்று கேள்வி முக்கியத்துவம் பெறும். தற்போதைய பொலிஸ் அதிகாரிகளில் சிரேஷ்ட நிலையில் இருக்கின்ற ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரை ஜனாதிபதி பரிந்துரைக்க, அவற்றில் ஒருவரை அரசமைப்புக் கவுன்ஸில் அப்பதவிக்கு அங்கீகரிக்க வேண்டும்.

தேசபந்து தென்னக்கோன் நாட்டின் 36 ஆவது பொலிஸ்மா அதிபர். அவர் அச்சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட சமயத்தில் இப்போது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய பதில பொலிஸ்மா அதிபராக கடந்த செப்டம்பர் 27 ஆம் திகதி முதல் நியமனம் பெற்றுப் பணியாற்றுகிறார். 1988 இல் சாதாரண கான்ஸ்டபிள் ஆகப் பொலிஸ் சேவையில் சேர்ந்து, ஒவ்வொரு பதவி நிலையாக அவர் உயர்ந்து வந்துள்ளார். ஆனால் தற்போதைய பொலிஸ் சேவையில் சிரேஷ்ட நிலையில் இருக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அவர் அல்லர். அவரையும் விட சிரேஷ்ட நிலையில் பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் பத்தனியாகே இருக்கிறார்.

அந்த சிரேஷ்ட நிலையைப் புறம் ஒதுக்கித்தான் தற்போது பதில் பொலிஸ்மா அதிபர் பதவி பிரியந்த வீரசூரியவுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

பதில் பொலிஸ்மா அதிபராக அவர்தற்போதுகடமையாற்றுவதால் அடுத்த பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு அவருக்கு அதிகம் உண்டு என்று கூறப்படுகின்றது.

அடுத்த பொலிஸ்மா அதிபராக அவர் பதவியேற்றாலும் தமது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்து அவர் ஓய்வு பெற்ற பின்னர், ஒரு சிறிது காலத்துக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் பதனியாகே பொலிஸ்மா அதிபராக நியமனம் பெறுவதற்கு வாய்ப்புக் கிட்டும் என்றும் சொல்லப்படுகின்றது.

தேசபந்து தென்னக்கோன் பதவி இழந்த பின்னர் இப்போது பிரதி பொலிஸ்மா அதிபர் பதவிகளில் இருக்கும் அதிகாரிகளில் யாருடைய பெயரை புதிய பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரைக்கிறார் என்பதும், அவருடைய பெயரை பத்து உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸிலில் பெரும்பான்மையினர் ஆதரிப்பார்களா என்பதும் இன்றைய நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

எது, எப்படி என்றாலும் பொலிஸ்மா அதிபர் பதவிக்கான உள்வீட்டுக் குடுமிப்பிடிச் சண்டை ஏற்கனவே தொடங்கி விட்டதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

அண்மையில் கணக்காய்வாளர் ஆணையாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரைத்த பெயரை அரசமைப்புக் கவுன்ஸில் நிராகரித்தமை நினைவூட்டத்தக்கது. புதிய பொலிஸ்மா அதிபர் நியமனத்திலும் அத்தகைய இழுபறி வருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# போக வேண்டிய இடத்துக்கு உங்களை அனுப்பிவைப்போம்

## தயாராக இருங்கள் என்று நாடாளுமன்றில் அநுர அரசை விளாசித் தள்ளிய நாமல் எம்.பி.

"ஆட்சிக்கு வரும்போது எங்களைத் தயாராக இருக்குமாறு கூறினீர்கள். இப்போது நீங்களும் தயாராக இருங்கள். போகும் இடத்தைக் காட்டுகின்றோம்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசை விளாசித் தள்ளினார் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேலையாள்களின் வரவு – செலவுத் திட்ட நிவாரணப்படி திருத்தச் சட்டமூலம் மற்றும் வேலையாள்களின் தேசிய குறைந்தபட்ச வேதனத் திருத்த சட்டமூலம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் 15 வருடங்களுக்கு முன்னர் கூறியவற்றை இப்போதும் தெரிவித்து வருகின்றனர். ஆட்சிக்கு வந்த பின்னரும் அதே பொய்களைக் கூறுகின்றனர்.



சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் கூறுகின்றீர்கள். அது நல்ல விடயம். ஆனால், சம்பளத்தை அதிகரித்து அந்தச் சம்பளத்துக்கு நிகராக வரியை அறவிட்டு மீண்டும் அரசுக்குப் பெற்றுக் கொள்கின்றீர்கள். இதனால் சம்பளம் அதிகரிக்கப்பட்டமையின் நன்மை ஊழியருக்குக் கிடைக்கின்றதா? அவ்வாறு இல்லை. வரிக் கொள்கைக்கு அமைய அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் பெருமளவு தொகையை அரசு பெற்றுக் கொள்கின்றது.

ஆட்சிக்கு வர முன்னர் ஒரே கையெழுத்தில் செய்துவிடுவோம் என்று கூறினீர்கள். ஆனால், அது இலகுவான விடயம் அல்ல என்பது இப்போது புரிந்திருக்கும்.

இப்போது சகல அரச நிறுவனங்களிலும் பழிவாங்கல்கள் இடம்பெறுகின்றன. தொழிற்சங்கங்கள் ஒடுக்கப்படுகின்றன.

தொழிற்சங்கங்களை நீங்களே வழிநடத்தினீர்கள். ஆசிரியர் சங்கத்தினர் பாடசாலைக்குச் செல்லாமல் அதில் இருந்தனர். இப்போது தொழிற்சங்கங்களைக் கைவிட்டு, இடமாற்றங்களைச் செய்து அரச சேவையை செயலிழக்கச் செய்ய வேண்டும் என்று கூறுகின்றீர்கள். உங்கள் அரசியல் தலையீடுகள் தொடர்பில் கதைக்காது அரச அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றீர்கள்.

ஆனால், அரச துறையை இல்லாமல் செய்துவிட வேண்டாம். சிறிய வர்களின் அரசு இப்போது முதலாளிகளின் அரசாக மாறியுள்ளது. அவர்களிடம் கேட்டுத்தான் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. கோடீஸ்வர வர்த்தகர்களிடம் கேட்டுத்தான் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. இதனை விடுத்து சாதாரண மக்களிடம் கேட்பதில்லை." – என்றார்.

# இந்தியத் தலைநகர் புதுடில்லியில் கறுப்பு ஜீலை நினைவேந்தல் நாளை!

நாற்பத்தி இரண்டு ஆண்டுகள் கடந்தும் தமிழ்த் தேசிய இனத்தின் நிலையான இருப்புக்காக தமிழ் மக்கள் இலட்சிய உறுதியோடு போராடி வருகின்றனர்.

கறுப்பு ஜீலையின் கனத்த நினைவுடன் இந்தியத் தலைநகர் புது டில்லியில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

கறுப்பு ஜீலை நிகழ்வுகளில் இழந்த அப்பாவித் தமிழ் குடிமக்களின் வாழ்க்கையைத் தொடர்ந்து நினைவில் கொள்வதாக "இந்துப் போராட்டக் குழு" (HINDU STRUGGLE COMMITTEE) தெரிவித்துள்ளது.

இந்தப் படுகொலைகளுக்கு பொறுப்பானவர்கள் நீதிக்கு கொண்டு வரப்படும் வரை தமிழ் மக்களுக்காக தொடர்ந்து வாதிடும் என்றும் "இந்துப் போராட்டக் குழு" சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கான நீதியை நாங்கள் கோருவதுடன், இலங்கைத் தமிழர்களின் கலாச்சார மற்றும் இனப் படுகொலையை நினைவு கூரும் வகையில் நாளை 24 ஆம் திகதி 2.30 மணிக்கு அரசியலமைப்புச் சங்கம், புது டில்லி, இந்தியா எனும் முகவரியில் கறுப்பு ஜீலை நினைவேந்தல் நடைபெறவுள்ளது.



### ஆரோக்கிய சமூகத்தை உருவாக்கும் நோக்கில்

# தனியார் பிரத்தியேக வகுப்புக்களை வெள்ளி, ஞாயிறு நிறுத்த வேண்டும்!

### யாழ். மாவட்ட சர்வ மத பேரவை கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்க சமய விழுமியங்கள் மற்றும் ஒழுக்கம்மிக்க வாழ்க்கை முறையை உறுதி செய்ய வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் பிரத்தியேக வகுப்புகளை நிறுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநரிடம் யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெள்ளிக்கிழமைகளில் பாடசாலை வேளைக்குப் பின்னரும் ஞாயிற்றுக் கிழமைகளில் மதியத்துக்கு முன்னரும் தனியார் பிரத்தியேக வகுப்புகளை முழுமையாக நிறுத்தி, மாணவர்கள் சமய விழுமியங்களைப் புரிந்து வழி படவும் வாழவும் உரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தரவேண்டும்.

விரக்தி, தற்கொலை, போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாதல், வன்முறை வாள் வெட்டு என்பன அதிகரித்துவரும் சமகால சூழ்நிலையில் ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்க சமய விழுமியங்கள் மற்றும் ஒழுக்கம்மிக்க வாழ்க்கை முறையை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்.

அத்துடன் மாணவர்கள் விளையாட்டுகளில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதும் அவசியம். விளையாட்டுக்கழகங்கள் சமூக உறவை மேம்படுத்த உரிய விளையாட்டுகளில் ஈடுபட ஊக்குவிக்கப்பட வேண்டும். கிராமங்களில் சமூக உருவாக்கங்களை ஏற்படுத்தி வந்த சனசமூக நிலையங்கள் தொடர்ந்து இயங்க உரிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். இவை எமது சமூகத்தில் நல்ல மனிதர்கள் உருவாவதை உறுதி செய்யும்.

தனியார் பிரத்தியேக வகுப்புகளை, குறைந்தது தரம் 10 இற்கு உட்பட்டவர்களுக்காவது, வெள்ளி மற்றும் ஞாயிறுகளில் நிறுத்தி, நல்ல ஒரு ஆக்கபூர்வமான சமூகத்தை உருவாக்க உரிய வசதிப்படுத்தல்களை மேற்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த விடயத்தில், எமது ஒத்துழைப்பையும் உடனிருப்பையும் உறுதி செய்கிறோம். – என்றுள்ளது.

# இ.தொ.கா. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் கலந்துரையாடல்!





இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலும், தகவல் பதிவுப் புத்தகம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மாவட்ட ரீதியில் போட்டியிட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவாகியிருந்த உறுப்பினர்களுடனான விஷேட கலந்துரையாடல் கட்சியின் தலைமையகமான சௌமிய பவனில் நேற்று (22) இடம்பெற்றது.

இதன்போது கட்சியுடன் இணைந்த கொள்கைகளுக்கு அமைவாக எதிர்காலத்தில் செயற்படவேண்டிய நெறிமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான புதிய சில நடைமுறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

மலையக வரலாற்றில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்நோக்கிய சவால்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொது மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்கும் போது மேற்கொள்ள வேண்டிய விடயங்கள், இ.தொ.காவின் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் தமது சபைகளில் மேற்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பாகவும், மேலும் தமது வட்டாரத்தில் மக்களுடன் இணைந்து பணியாற்றுவதனூடாக எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்ற தகவல்களை பதிவு செய்து கட்சியின் உயர்பீடத்துக்குச் சமர்ப்பிப்பதற்கான "தகவல் பதிவுப்புத்தகம்" வழங்கி வைக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்படும் பதிவுப் புத்தகத்தைப் பரிசீலனை மேற்கொள்வதற்கான விஷேட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களால் மீள் பரிசீலனை மேற்கொண்டு கட்சியின் உயர்பீடத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையின் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தங்களது கடைமைகளில் தவறிழைக்கும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாகவும் விவரமாக அனைவருக்கும் தெளிவூட்டப்பட்டிருந்தது.

இந்தக் கலந்துரையாடலின்போது, இ.தொ.கா. பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், நிதிச் செயலாளரும்,

தொடர்ச்சி▼

# இ.தொ.கா. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் கலந்துரையாடல்!



தொடர்ச்சி▲

தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன், பிரதித் தலைவர் கணபதி கனகராஜ், பிரதித் தவிசாளர் ராஜதுரை, பிரதிப் பொதுச் செயலாளர் செல்லமுத்து, உப தலைவர்கள், உயர்பீட உறுப்பினர்கள் அடங்களாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.






# பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உபகரணங்கள்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

பெண்களை வலுவூட்டும் திட்டத்தின் கீழ் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் வதியும் 10 குடும்பங்களுக்கு குழாய்க் கிணறு அமைப்பதற்கான குழாய்கள், நீர் கொண்டு செல்லும் குழாய்கள், தூவல் நீர்ப்பாசனக் கருவிகள், நீர் இறைக்கும் இயந்திரம் உள்ளிட்ட அண்ணளவாக 30 லட்சம் ரூபா பெறுமதியான விவசாயக் கருவிகள் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் நேற்று (22) வழங்கப்பட்டன.

இந்த உபகரணங்களை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் தலைவரான கணபதிப்பிள்ளை சிவானந்தன், செயலாளரான வினோதா விஜயராசா மற்றும் பொருளாளரான இராசரத்தினம் கோகுலதாசன் உள்ளிட்டோர்கள் இணைந்து வழங்கினர்.

இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளைத் திறம்பட முன்னெடுத்து செல்ல இந்தத் திட்டம் மூலம் நன்மையடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார் .

# கறுப்பு ஜூலை நிகழ்வுகளை மடைமாற்ற எத்தனிக்கும் ஜே.வி.பியின் செயற்பாடு!

**வலி. கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்**

தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட படுகொலைகள் நடைபெற்றன என்ற உண்மையையும் அநீதிகளுக்கு பொறுப்புக் கூறவேண்டும் என்ற கடப்பாட்டையும் மூடி மறைக்கும் செயலாகவே தேசிய மக்கள் சக்தி அரசின் அடிப்படையான ஜே.வி.பியின் உத்தியோகபூர்வ இளைஞர் அமைப்பான சோசலிச இளைஞர் சங்கம் சகோதரத்துவ நாளாக கறுப்பு ஜூலை நிகழ்வுகளை மடைமாற்றம் செய்ய எத்தனிக்கின்றது.

இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழ் மக்கள் அடையாளப்படுத்தப்பட்டு தேடியளிக்கப்பட்ட கறுப்பு ஜூலை நினைவுகளின் 42 ஆவது ஆண்டை உணர்வு பூர்வமாக எமது இனம் அனுஷ்டிக்கின்றது. கடந்த 42 ஆண்டுகளுக்கு முன்னர் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உள்ளிட்ட 54 அரசியல் கைதிகள் வெலிக்கடை சிறையில் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழர்களை வாக்காளர் பட்டியலுடன் தேடிச் சென்று மூவாயிரத்துக்கு மேற்பட்ட



தமிழர்களை உயிருடன் தீயில் இட்டும் இதர கொடூரங்களுக்கு உள்ளாக்கியும் கொன்றழித்தனர். ஒன்றரை லட்சம் பேர் வீடற்றவர் ஆயினர். 8 ஆயிரம் வீடுகளும் 5 ஆயிரம் வணிக நிறுவனங்களும் கொள்ளையிடப்பட்டன. அழிக்கப்பட்டன.

இந்தக் காலகட்டத்தில் 300 மில்லியன் டெலர்கள் அழிக்கப்பட்டன. இதனை பன்னாட்டு மனித உரிமைகள் ஆணையம் தமிழருக்கு எதிரான திட்டமிட்ட இனப் படுகொலை என்று விவரித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த இனப் படுகொலையை அரச இயந்திரமே தகவமைத்து வழிப்படுத்தியது என்பதற்கு சகல ஆதாரங்களும் உள்ளன.

இவ்வாறாக நாட்டில் இனப் படுகொலை நடைபெற்றமைக்கு பொறுப்புக் கூறல் எதையும் முன்வைக்காமல் அந்தத் தேவையைப் போர்த்தி மூடிவிடும் உத்தியுடன் இன்றைய அரசு நிதானமாகச் செயற்படுகின்றது.

இந்தப் படுகொலைகளுக்கு ஜே.வி.பியும் பொறுப்புடையது. ஆதலால் அரசாங்கத்தின் மாணவர் அமைப்பான ஜே.வி.பி. தலைமைச் செயலகத்துக்குள்ளேயே இயங்கும் உத்தியோகபூர்வ இளைஞர் அமைப்பான சோசலிச இளைஞர் அமைப்பு ஊடாக அரச அனுசரணையுடன் இன்றைய நாளை சகோதரத்துவ நாள் பிரகடனப்படுத்தப் படுகின்றது. இதற்காக யாழில் அரச வளங்கள் ஈடுபடுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையையும் அதற்கான பொறுப்புக் கூறலையும் திட்டமிட்டு மறைக்கும் – இல்லாமலாக்கும் முயற்சியாகும். இதனை நாம் கண்டிக்கின்றோம். ராஜபக்ஷாக்களை ஒத்ததாக இன்றைய அரசு மென்வலு அணுகு முறையில் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது என்ற வழிப்புணர்வை ஏற்படுத்துகின்றோம்.– என்றார்.





# அட்டாளைச்சேனையில் இடம்பெற்றுள்ள சத்துமா தயாரித்தலும்விழிப்புணர்வும்

(நவாஸ்)

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் உள்ள அட்டாளைச்சேனை, பாலமுனை, திராய்க்கேணி, ஒலுவில் போன்ற கிராமங்களில் உள்ள தாய்மார் கழக அங் கத்தவர்களுக்கான சத்துமா தயாரித்தலும் அதன் பயன் பாடும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வும் நடத்தப்பட்டுள் ளன.

அட்டாளைச்சேனை கலாச்சார மண்டபத்தில் நேற்று சுகாதார வைத்திய அதிகாரி ஏ. எம்.எம். இஸ்ஸத்தீன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வளவாளர்களாக தாய்சேய் நல வைத்தியதிகாரி வைத்தியர் றிஸ்வின் பிரதேச மேம்பாட்டு பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர் மு. சௌந்தராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் மற்றும் நூற்றுக் கணக்கான தாய்மார்கள் கலந்து கொண்டனர்.







# பேசாலையில் உணவக உரிமையாளருக்கு சுகாதார விழிப்புணர்வு அறிவுறுத்தல்கள்

(வாஸ் கூஞ்ஞ)

தற்பொழுது மன்னார் பகுதியில் உணவு வர்த்தக நிலையங்களில் சுகாதாரத்தை மேற்பார்வை செய்யப்படுவதில் பொது சுகாதாரப் பகுதினர் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

இந்த வகையில் பேசாலைப் பகுதியிலுள்ள உணவகங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் விற்பனை செய்வோருக்கான சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு மன்னார் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பேசாலை பொது சுகாதார பரிசோதகர் கஜேந்திரத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளராக மன்னார் பொது சுகாதார மேற்பார்வை பரிசோதகர் கே.சி.வின்சன்ட், மன்னார் நகர் பொது சுகாதார பரிசோதகர் வை.ஜெனீஸ் மற்றும் மன்னார் பிரதேச சபை வருமான வரி பரிசோதகர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

பேசாலை பகுதியைச் சேர்ந்த அதிகமான வர்த்தகர்கள் கல்து கொண்ட இந்த நிகழ்வில் பேசாலை பகுதிகளில் உணவுப் பொருள்கள் கையாளும் பொழுது உணவு சுகாதாரம் மற்றும் தரம் தொடர்பான விழிப்பூட்டும் நிகழ்வாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பேசாலை வர்த்தகர்கள் உணவுப் பொருள்களை வழங்கும் போது எப்படியான நிலையில் இருக்க வேண்டும் என்ற விளக்கங்கங்கள் வழங்கப்பட்டன.

உணவு தயாரிப்பு அதன் இடங்கள் எப்படியாக இருக்க வேண்டும். தனி , பொது சுகாதரம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்றும் கலந்துரையாடப்பட்டு அதற்கான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

பொது சுகாதர அதிகாரிகளால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்போது சுகாதார சீர்கேடுகள் காணப்படும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நிலை எற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# மாற்றுத் திறனாளிகளுக்கான “சித்ரு 2025” கலாசார நிகழ்வு




சமூக சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டலின்படி, மாற்றுத் திறனாளிகளின் கலைநய திறமைகளை வெளிக் கொண்டு வந்து அவர்களை தேசிய நிலைக்குத் தயார்ப்படுத்தும் வகையில் மாற்றுத் திறனாளிகளுக்கான “சித்ரு 2025” தேசிய கலாசார நிகழ்வு ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படுகிறது.

இந்த நோக்கில், ஜூன் 20 ஆம் திகதி மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் திருகோணமலை மாவட்டம் முதல் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது.

போட்டியில் பங்கேற்ற மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குச் சான்றிதழ்களை திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன் வழங்கினார். அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்று (22) மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள ஒருங்கிணைப்பாளர் தவராசா பிரணவனும் நிகழ்வில் கலந்து கொண்டார்.



# 1983 கறுப்பு ஜூலையில் மடிந்த இலக்கியவாதி கலா.பரமேஸ்வரன்!

## (1944 - 1983) நினைவுகள்

● முருகபூபதி.

1983 ஜூலை மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நள்ளிரவு யாழ்ப்பாணம் பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்தியில் வந்துகொண்டிருந்த இரா ணுவ ட்ரக் வண்டி மீது நிலக்கண்ணித் வெடித் தாக் குதல் நடந்தது.

அந்தச் சம்பவத்தில் 13 இராணுவத்தினர் கொல லப்பட்டதன் எதிரொலியை தமிழர்கள் இன்றும் கறுப்பு ஜூலை என்று அனுஷ்டித்துக் கொண்டி ருக் கிறார்கள். இலங்கையின் அரசியலிலும் அங்கு வாழ்ந்த பூர்வகுடி தமிழ் மக்களதும் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திவிட்ட அந்த 1983 ஜூலை மாதத்தில் யாழ்ப்பாணம் பலாலி வீதியில்ஒரு இல்லத் தில் அந்தக் கறுப்பு ஜூலை ஆழமாகவே பதிந்து விட்டது.

அந்த வீட்டிலிருந்த முதியவர் மற்றும் குடும்பத் தலைவர் தவிர்ந்த ஏனையவர்களை வேரோடு பிடுங்கி எறிந்து தேசாந்தரிகளாக்கியது.

அப்படியென்றால் - அந்த முதியவரும் குடும்பத் தலைவரும் என்ன ஆனார்கள்? அவர்களின் உடல் களைக் குண்டுகள் துளைத்து அவர்கள் பரலோகம் பயணித்தார்கள்.

எனது இனிய நண்பர் கலா. பரமேஸ்வரன் 24-07-1983 ஆம் திகதி யாழ்ப்பாணம் பலாலிவீதியில் கொல்லப்பட்ட 42 ஆவது நினைவு தினம் நாளை.

அந்தத் துயரமே இந்தக் கறுப்பு ஜூலையில் இன்றைய நாளில் எனது துயர்பகிர்வு.

அன்று 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடி ஆமாவாசை - போயாதினம். தென்னிலங்கையில் நாட்டின் ஜனாதிபதி உட்பட பௌத்தர்கள் அனை வரும் சிலர் அனுஷ்டித்துக் கொண்டிருந்தார்கள்.

இலங்கைத் தேசத்தில் ஒரு பகுதியில் சில.. மறு புறத்தில் வெளியே பதற்றம் சூழ்ந்திருந்தபோதிலும் தமது இல்லத்தில் அமைதியாக விரதம் அனுஷ் டித்தவாறு எல்லோருக்கும் எல்லா நன்மைகளும் கிட்டவேண்டும் எனப்பிரார்த்தனை செய்துவிட்டு மதிய உணவுக்கப் பின்னர் அந்த இல்லத்தின் பெரி யவர் தனது அறையில் பிரவேசித்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்.

அவரது மகளின் கணவர் மனைவி குழந்தைக ளுடன் உரையாடிக்கொண்டிருக்கிறார். வெளியே அந்த இல்லத்தின் கதவு தட்டப்படும் சத்தம்.


மனைவி - குழந்தைகளை வீட்டின் பின்புறத்துக்கு அனுப்பிவிட்டு அந்தக்குடும்பத்தின் தலைவர் கத வைத் திறக்கிறார்.

நீட்டிய துப்பாக்கிகளுடன் சில இராணுவத்தினர். உரத்து சத்தமிட்டு ஏதோ சொல்கின்றனர். அந்தக் குடும்பத் தலைவருக்கு மும்மொழியும் தெரியும்.

குடும்பத் தலைவர் தனது இரண்டு கைகளையும் மேலே தூக்கி உயர்த்தி ஏதோ சொல்ல முனைந்தார். மறுகணம் அவர் அங்கு வந்த சீருடையினரின் துப்பாக்கி வேட்டுக்களை ஏற்று தரையில் சரிந்து மடிந்தார்.

கையை உயர்த்தினால் அதன் பொருள் சரண். ஆனால் - இராணுவத்துக்கு அதுபற்றி சொல்லித் தரப்படவில்லையோ?

மனைவியும் குழந்தைகளும் கதறிக்கொண்டு ஓடிவருகின்றனர். வந்திருக்கும் சீருடைகொலை



வெறியர்கள் அந்த முதியவர்படுத்திருக்கும் அறைக் குள்ளும் சென்று வேட்டுக்களை தீர்க்கின்றனர். அந் தப் பெரியவர் கட்டிலிருந்து சரிந்து விழுந்து அவரும் மடிந்து விடுகிறார்.

சில மணித் துளிகளுக்கு முன்னர் ஆடி அமா வாசை விரதத்துக்காகக் குளித்து முழுகி வேட்டி அணிந்து குடும்பத்தினருடன் பிரார்த்தனை செய்த அந்தப் பெரியவரும் அந்தக் குடும்பத்தின் தலைவரும் இரத்த வெள்ளத்தில் குளித்து தரையில் கிடக்கின்றனர்.

குடும்பத் தலைவரின் அருமை மனைவி மயங் கிச் சரிகின்றார். குழந்தைகள் கதறித் துடிக்கின்றன. அயலவர்கள் ஓடிவந்து அதிர்ச்சியில் மௌனிக்கின் றனர். அந்தச் சீருடைகள்அடுத்த வேட்டைக்கு வேட் டுக்களுடன் புறப்பட்டன.

எனது அருமை நண்பரும் இலக்கியவாதியும் தமிழ் ஆய்வறிஞருமான கலா.பரமேஸ்வரனின் யாழ்ப்பாணம் பலாலி வீதி இல்லத்தில் 24-07-1983ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் பொழுதில் கறுப்பு ஜூலை அவ்வாறுதான் ஆழமாகத்தடம் பதித்தது.

கலா. பரமேஸ்வரனை இறுதியாக பேராசிரியர் கைலாசபதியின் இறுதிச் சடங்கிலேயே சந்தித்தேன். வெள்ளவத்தையில் கடற்கரைப் பக்கமாக கின்றோஸ் அவனியூவில் கைலாசபதியின் மாமனார் மாணிக்க இடைக்காடர் அவர்களின் இல்லத்தில் கைலா ஸின் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கிறது.

வெளியே முன்றிலில் நாமனைவரும் சோகமே உருவாக மௌனமாக நிற்கின்றோம். எமது மௌனத்தை கலைத்தவர் கலா. பரமேஸ்வரன். அவர் எம் முன்னே நின்ற மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவைப் பார்த்து - 'கைலாஸின் உருவப்படத்தை மல்லிகையின் அட்டையில் வெளியிட்டிருக்கிறீர்களா?' எனக்கேட்கிறார்.

நான் முந்திரிக்கொட்டையாக முந்திக்கொண்டு "ஆம்.1972 நவம்பர் மாத மல்லிகையை கைலாச பதிதான் அலங்கரித்தார். ஜீவா எவரையும் தவற விடமாட்டார்". - எனச் சொல்கின்றேன்.

" அட.... நல்ல ஞாபகத்துடன் சொல்கிறீர்... அப்படி யெண்டால் நான் சாக முந்தியும் என்ற படத்தையும்

தொடர்ச்சி▼

# 1983 கறுப்பு ஜூலையில் மடிந்த இலக்கியவாதி கலா.பரமேஸ்வரன்!

தொடர்ச்சி▼

மல்லிகை அட்டையில் பிரசுரிக்கும்... என்று சொல்லுங்கள்" – என்றார் கலா.பரமேஸ்வரன்.

'என்ன ஐசே... இப்படிச்சொல்கிறீர்... ?" – எனச் சொல்லி அவரை மென்மையாக கடிந்து கொண்டேன்.

இந்தச் சம்பவம் நடந்து சரியாக ஒருவருடத்தில் மல்லிகை டிசெம்பர் இதழில் மரணித்த இருவரும் மல்லிகையில் அவர்தம் நினைவுகளும் என்ற தலைப்பில் நான் எழுதியிருந்த கட்டுரையில் இடம் பெற்றவர் நண்பர் கலா. பரமேஸ்வரன். மற்றவர் மனிதம் இதழின் ஆசிரியர் நண்பர் விமலதாசன்.

கலா. பரமேஸ்வரன் பலாலிவீதியில் சுட்டுக்கொல்லப்பட்டார். விமலதாசன் மானிப்பாய் வீதியில் சுட்டுக் கொல்லப்பட்டார். இரண்டு சம்பவங்களும் வேறு வேறு சந்தர்ப்பங்களில் நடந்தன.

குறிப்பிட்ட 1983 ஜூலை அமளியில் வீரகேசரிக்கு வேலைக்கும் செல்லாமல் நீர்கொழும்பு – வவுனியா – யாழ்ப்பாணம் என்று குடும்பத்துடன் இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருந்தேன். அந்த ஆண்டு ஜூலையில் இருந்து டிசெம்பர் வரையில் ஆறு மாத காலம் அலைச்சலும் அவதியும்தான். இந்தக் காலப் பகுதியில் பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவினர் என்னையும் தேடுகிறார்கள் என்ற வதந்தி எங்கள் ஊரில் பரவியிருந்தது.

அன்றைய ஜனாதிபதி மிஸ்டர் தர்மிஸ்டர் ஜே.ஆர். மக்கள் விடுதலை முன்னணி உட்பட இடதுசாரிக் கட்சிகளை தடைசெய்திருந்த காலம்.

அவ்வேளையில் எனது அப்பாவும் அதிர்ச்சியில் மாரடைப்பு வந்து காலமானார். அவரது அண்ணன் சுப்பையா தொண்டமான் தமிழ் நாட்டில் பாளையங்கோட்டையில் மரணமானார். எங்கள் குடும்பத்தில் ஒரே மாதத்தில் இரண்டு துயரங்கள்.


இந்தச் சூழலிலும் மல்லிகையில் அடுத்தடுத்து இரண்டு கட்டுரைகள் எழுதியிருந்தேன். ஒன்றின் தலைப்பு "துன்ப மேகங்களும் சமகாலத் துயரங்களும்" மற்றது மேலே குறிப்பிட்ட, 'மரணித்த இருவரும் மல்லிகையில் அவர்தம் நினைவுகளும்".

இக்கட்டுரையை படித்துவிட்டு திருமதி ரஞ்சனா பரமேஸ்வரன் – அதில் நான் குறிப்பிட்டிருந்த .... அப்படியெண்டால் நான் சாக முந்தியும் என்ற படத்தையும் மல்லிகை அட்டையில் பிரசுரிக்கும்... என்று சொல்லுங்கள்... என்ற வரிகளை படித்துவிட்டு குமுறி அழுததாக நண்பர் மௌனகுரு மல்லிகை ஜீவாவிடம் சொன்னாராம்.

பரமேஸ்வரன் – ரஞ்சனாவின் பதிவுத் திருமணம் 1974 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி கண்டி கச்சேரியில் நடந்தது. பரமேஸ்வரனின் பல்கலைக்கழக பேராசான் சு.வித்தியானந்தன் அதற்கு சாட்சிக் கையொப்பம் இட்டார்.

பரமேஸ்வரனும் பேராசிரியர் வித்தியானந்தனின் அபிமானத்துக்கு உரிய மாணவர்களில் ஒருவர். வித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகத் தமிழ்ப் பீடத்துக்கு நியமனமானதும் திருகோணமலையில் அவருக்கு பாராட்டு நிகழ்வொன்றை சிறப்பாக நடத்தியிருக்கும் கலா. பரமேஸ்வரன் – வித்தியானந்தன் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமனம் பெற்றதும் யாழ்ப்பாணத்திலும் சிறப்பான விழா எடுத்து தனது பேராசானை பாராட்டி மகிழ்ந்தவர்.

கலா. பரமேஸ்வரனின் எதிர்பாராத திடீர் மறைவு




வித்தியானந்தனையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது இயல்பே.

அதனால்தான் கலா. பரமேஸ்வரன் ஆயுதப்படையினரால் கொல்லப்பட்ட பின்னர் வெளியான நினைவஞ்சலி மலரில் திருமணப் பதிவுக்கு சாட்சிக்கையெழுத்திட்ட கையால் நினைவஞ்சலியுரை எழுதவா? என்று மிகவும் உருக்கமாக தனது நினைவுகளை அதில் பதிவு செய்துள்ளார்.

அதென்ன அவரை கலா....கலா... என்று விளிக்கின்றேன் என இதனைப் படிக்கும் வாசகர்கள் கேட்கலாம். இதே கேள்வியை திருமதி ரஞ்சனா பரமேஸ்வரனிடத்தில் நானும் கேட்டேன். கலா என்பது கணவரின் புனை பெயர் எனச் சொன்னார்.

பரமேஸ்வரன் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டமும் முதுமாணிப்பட்டமும் பெற்றவர். பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் வெளியீடான இளங்கதிர் ஆசிரியர் குழுவிலும் இயங்கியவர். இந்தப் பல்கலைக் கழகத்தில் பயின்ற பல முக்கியமான ஈழத்து இலக்கிய ஆளுமைகளின் சிறுகதைத் தொகுப்பு காலத்தின் குரல். அதனை தொகுத்தவரும் கலா. பரமேஸ்வரன்தான்.

நாடக நடிகர் – வானொலிக் கலைஞர் – இலக்கிய ஆய்வாளர் முதலான முகங்களுடன் வாழ்ந்த பரமேஸ்வரன் சமூகச் செயற்பாட்டாளருமாவார்.

1961 இல் பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தை அமுல்படுத்திய பொழுது அதனைக் கண்டித்து யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக சுலோக அட்டைகளை தாங்கியவண்ணம் சத்தியாக்கிரகமும் செய்திருந்தவர்.

இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். மாவட்ட மேற்பார்வையாளராகவும் பின்னர் சேமிப்பு பிரசார உத்தியோகத்தராகவும் பணியாற்றியவர். மூத்த இலக்கியவாதியும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியருமான டாக்டர் நந்திக்கு

தொடர்ச்சி▼

# 1983 கறுப்பு ஜூலையில் மடிந்த இலக்கியவாதி கலா.பரமேஸ்வரன்!

**தொடர்ச்சி▲**

தேசிய சேமிப்பு வங்கியில் ஒரு சேமிப்புக் கணக்கை தொடக்கி வைத்தவரும் பரமேஸ்வரன்தான் என்ற தகவலை நந்தியும் தமது அஞ்சலிக் குறிப்பில் பதிவு செய்துவைத்துள்ளார்.

1966களில் எனது அக்காகுடும்பத்தினர் பலாங்கொடையில் வசித்தனர். 1981 இல் பலாங்கொடை உட்பட சில மலையகப்பிரதேசங்களில் கலவரம் வெடித்தது. அதனால் அவர்கள் இடம்பெயர்ந்து வவுனியாவில் சிறிது காலம் வசித்தனர்.

ஒரு நாள் அக்காவிடமிருந்து வந்திருந்த கடிதத்தில் வவுனியாவிலிருக்கும் குடும்பத் திட்டச் சங்கத்தால் ஒரு கட்டுரைப் போட்டி மாவட்ட ரீதியில் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் அதில் தான் பங்குபற்றவிருப்பதால் தனக்கு சில குறிப்புகளை எழுதி அனுப்புமாறும் கேட்டிருந்தார்.

நானும் உடனடியாக எழுதி அனுப்பினேன். அக்கா தனது கைச் சரக்கையும் சேர்த்து எழுதி அனுப்பி அந்தப் போட்டியில் முதல் பரிசு பெற்றுவிட்டார். சில மாதங்களுக்குப் பின்னர் அக்கா ஊருக்கு வந்த சமயம் தனக்கு பரமேஸ்வரன் என்ற குடும்பத் திட்டச் சங்க அதிகாரி ஒருவர்தான் பரிசு வழங்கினார் என்று சொன்னார்.

எனக்கு – நான் அறிந்திருக்கும் கலா.பரமேஸ்வரனும் அக்கா குறிப்பிடும் பரமேஸ்வரனும் ஒருவர்தான் என்ற உண்மை அதன்பின்னர் பேராசிரியர் கைலாசபதியின் மரணவீட்டில் அவரை (இறுதியாக) சந்திக்கும் வரையில் தெரியாது.

தமது 39 வயதில் மரணமான கலா.பரமேஸ்வரனை நினைக்கும் தோறும் எனக்கு சுந்தரராமசாமி தனது ஜே.ஜே. சில குறிப்புகள் நாவலின் ஆரம்பத்தில் பதிவு செய்துள்ள வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

மேதாவிலாசத்துக்கும் அற்பாயுளுக்கும் அப்படி என்னதான் நமக்கு எட்டாதபடி ரகசிய உறவோ? அதிலும் இந்த நாற்பதை ஒட்டிய வயதுகள்....

தமிழிலும் பாரதி – புதுமைப்பித்தன் – கு.ப.ராஜகோபாலன் – கு. அழகிரிசாமி – மு.தளையசிங்கம் என்று எத்தனை இழப்புகள்.... என்று சுந்தரராமசாமி எழுதுகிறார்.

இவர்களின் மறைவின் பின்னணியில் வறுமை – நோய் – உட்பட இன்ன பிறகாரணங்கள் இருந்தன. ஆனால் – கலா. பரமேஸ்வரன் வறுமையால் வாடியவர் அல்ல. நோய் உபாதைகளும் அவரை அண்டவில்லை. தான் நீண்ட காலம் வாழ்வேன் என்ற திடமான நம்பிக்கையுடன் வாழ்ந்தவர். தனது மனைவி – குழந்தைகள் பற்றி ஒரு குடும்பத் தலைவனுக்கே உரித்தான எதிர்காலக் கனவுகளுடன் வாழ்ந்தவர். 39 வயதுக்குள் அவரது உயிர் பறிக்கப்பட்டுவிட்டது.

கலா. பரமேஸ்வரன் குறித்து எழுதும் செம்பியன் செல்வன் தெரிவிக்கும் சம்பவத்தையும் கைலாசபதியின் மரணவீட்டில் கலா. பரமேஸ்வரன் என்னுடன் உரையாடிய அந்த இறுதிச்சந்திப்பு சம்பவத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றேன்.

1983 ஜூலை மாதம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை. திருநெல்வேலி சந்தியில் பரமேஸ்வரனும் செம்பியன் செல்வனும் சந்திக்கின்றனர்.

சுமார் ஒன்றரை மணிநேரம் இலக்கியம் ஆய்வு பற்றியெல்லாம் உரையாடுகின்றனர். விடைபெறும் பொழுது பரமேஸ்வரன் சொல்கிறார், “மச்சான் கனக்கப் பேச வேண்டும். என்ர வீட்டை ஒரு நாளும் வாராயில்லை. வாவன். வாரதென்டால் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் வா. நான் ஞாயிறு போய் விடுவேன்.”

ஆம்.... அவர் ஞாயிறன்று நிரந்தரமாகவே போய்விட்டார்.

வவுனியாவில் தனது கடமையை தொடருவதற்காக ஞாயிறன்று ஆடி அமாவாசை விரதமிருந்துவிட்டு புறப்படவிருந்தவரை காலன் அழைத்துக் கொண்டு போய்விட்டான். அவரை மட்டுமல்ல அவரது மாமனாரையும் (திருமதி ரஞ்சனா பரமேஸ்வரனின் தந்தையார்) உடன் அழைத்துச் சென்றுவிட்டான் அந்தக் காலன். வழியனுப்பிவைத்தவர்கள் சீருடை தரித்தவர்கள்.

வெள்ளிக்கும் ஞாயிறுக்கும் இடைப்பட்ட அந்த காலமும் கணங்களும் எத்தகையன என்பதை செம்பியன் செல்வனின் உணர்வுகள் பதிவு செய்கின்றன.

கலா.பரமேஸ்வரனின் பல்கலைக்கழக ஆய்வேடு நச்சினார்க்கினியரின் இலக்கியத் திறனாய்வு. இதனை நூலாக வெளியிட்டது. தமிழ்நாடு சேலம் குயில் பண்ணை பதிப்பகம்.

நச்சினார்க்கினியரின் இலக்கியக்கொள்கையையும் திறனாய்வு முறைகளையும் கலா. பரமேஸ்வரன் இந்நூலில் ஆய்வுசெய்துள்ளார். தமக்கு இந்த ஆய்வை மேற்கொள்ள ஊக்கமளித்த தனது பேராசிரியர்கள் செல்வநாயகம், வித்தியானந்தன் ஆகியோருக்கும் ஆலோசனைகள் வழங்கிய கலாநிதி ஆ. வேலுப்பிள்ளைக்கும் தனது நன்றியறிதலைத் தெரிவித்துள்ளார்.

இந்த நூலை எமது ஆஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கம் பல வருடங்களுக்கு முன்னர் மெல்பனில் நடத்திய எழுத்தாளர் விழாவில் அறிமுகப்படுத்தியது. மாலதி முருகபூபதி அறிமுகவுரை நிகழ்த்தினார்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மேற்கு ஆஸ்திரேலியாவில் நடந்த தமிழ் அரங்கு நிகழ்வில் திருமதி ரஞ்சனா பரமேஸ்வரனை சந்தித்த பொழுது தனது கணவர்தான் எண்பது வயது வரையில் வாழ்வேன் என்று நம்பிக்கையுடன் அடிக்கடி சொல்வார். அதில் பாதியைக்கூட கடக்காமல் கடந்துசென்றுவிட்டார் எனக்குறிப்பிட்டார்.

ரஞ்சனா பரமேஸ்வரன் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நூலகராக முன்னர் பணியாற்றியவர். மேற்கு ஆஸ்திரேலியாவுக்கு வந்தபின்னரும் மாநகர நூல் நிலையத்தில் பணியாற்றிவிட்டு ஓய்வுபெற்றுள்ளார். கலா. பரமேஸ்வரனின் புதல்விகள் செல்வியும் நிவேதிதாவும் பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்துகொண்டு பணிகளில் இருக்கின்றனர்.

அந்தக் குடும்பத்தின் வாழ்க்கைப் பயணத்தில் அந்த கறுப்பு ஜூலை அழுத்தமாகவே படிந்திருக்கிறது. அவர்கள் குடும்பத்தில் மட்டுமா....? அன்று இலங்கையில்... இன்று காஸாவில்... உக்ரேயினில்...

கருப்பு ஜூலைக்கு வித்திட்டவர்கள் யார்...? என்ற வாதப்பிரதிவாதம் அரசியல் ஆய்வாளர்களிடம் இன்றும் தொடருகின்றது.

உலகெங்கும் ஆயுதங்கள் மௌனிக்கும் காலத் துக்காக ஏங்கிக்காத்திருக்கின்றோம்.







# பேராதனை பல்கலைக்கழக 86 ஆவது பட்டமளிப்பு விழா!

**( கண்டியிலிருந்து வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கையின் பழம் பெரும் பல்கலைக்கழகமான பேராதனை பல்கலைக்கழகத்தின் 86 ஆவது பட்டமளிப்பு விழா இன்று (23) புதன்கிழமை காலை கோலாகலமாக ஆரம்பமானது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புதிய 17 ஆவது வேந்தர் பேராசிரியர் எம்.ஏ.கே.எல்.திசாநாயக்க தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

2023 - 24 இல் மருத்துவப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த மருத்துவபீட மாணவர்கள், முகாமைத்துவ பீட மாணவர்கள், மிருக வைத்திய பீட மாணவர்கள், முதுமாணிப் பட்ட மாணவர்கள் ஆகியோருக்கு இன்று புதன்கிழமை (23) காலை நான்கு மணிநேரம் பட்டமளிப்பு இடம் பெற்றது.

முன்னதாகக் கொட்டும் மழைக்கு மத்தியில் பட்டதாரிகள் மற்றும் வேந்தர் உபவேந்தர் உள்ளிட்ட பல்கலைக்கழக நிர்வாகிகளின் ஊர்வலம் இடம்பெற்றது.

தொடர்ந்து பட்டமளிப்பு விழா நடைபெறும் ஜிம்னாசியம் மண்டபத்தில் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து பல்கலைக்கழக கீதம் மற்றும் ஜயமங்கள கீதம் இசைக்கப்பட்டன.

1942 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பேராதனை பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற 86 ஆவது பட்டமளிப்பு விழாவில் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பட்டங்களை பெறுகின்றனர். காலையில் சுமார் 1200 பட்டதாரிகள் பட்டங்களை முறைப்படி பெற்றுக் கொண்டனர்.

பட்டமளிப்பு விழா நாளை மறுதினம் (25) வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.



# மட்டு. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை வெள்ளிவிழா மாணவர் ஒன்று கூடல்!

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் 2000 ஆம் ஆண்டில் கற்ற பழைய மாணவர்களின் வெள்ளி விழா நிகழ்வாக நட்புகளின் சங்கமம் என்னும் ஒன்றுகூடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது



### கடும் மழையுடனான சீரற்ற காலநிலையால்

# நானுஓயா, உடரதல்ல தோட்டத்தில் 47 பேர் இடம்பெயர்ந்து சென்றனர்!

(க.கிஷாந்தன்)

கடும் மழையுடனான சீரற்ற காலநிலையால் நானுஓயா, உடரதல்ல தோட்டத்தில் மேல் பிரிவில் ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 47 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களைத் தற்காலிகமாகப் பாதுகாப்பான இடத்தில் தங்க வைப்பதற்குத் தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடும் மழையால் கற்பாறைகள் சரிந்து வந்துள்ளதாலேயே அவர்கள், அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

கற்பாறையொன்று ஆட்டு தொழுவத்தில் விழுந்ததில் இரு ஆடுகள் உயிரிழந்துள்ளன. தொழுவமும் சேதமடைந்துள்ளது. நானுஓயா பகுதியில் கடந்த சில நாள்களாகவே கடும் மழை பெய்து வருகின்றது.

தொடர்ந்தும் மழையுடன் காலநிலை நீடிக்கும் பட்சத்தில் குறித்த பகுதியில் மண்மேட்டுடன் கற்பாறைகள் சரிந்து வீழுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இரவு நேரங்களில் சிறு பிள்ளைகளை வைத்துக்கொண்டு மழை காலங்களில் உயிர் அச்சத்துடன் வாழ்கின்றனர் என்று பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் சரிந்து விழுந்த கற்களும் ஆங்காங்கே ஆபத்தான நிலையில் தேங்கி நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

சம்பவம் தொடர்பாகப் பிரதேசத்துக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ஊடாக நுவரெலியா பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# உணவு ஒவ்வாமையின் காரணமாக 19 பேர் கிண்ணியா ஆஸ்பத்திரியில்!

(எச். எம். ஹலால்தீன் )

கிண்ணியாவில் உணவு ஒவ்வாமை காரணமாகப் பாதிக்கப்பட்ட 19 பேர் கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (22) பகல் இடம் பெற்றுள்ளது. கிண்ணியாவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் உணவு அருந்தியவர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

திருவோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள கிண்ணியா ஹோட்டலில் உணவு உண்டவர்களுக்கு இந்த உணவு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சுட்டக்கோழி (பார்பிக்யூ) இறைச்சி உணவு சாப்பிட்ட 10 பெண்கள், 06 ஆண்கள்,03 சிறுவர்கள் உட்பட 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மூதூர் வைத்திய சாலையில் மூவரும், நிலாவெளியில் இருவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உணவை சாப்பிட்டவர்களுக்கு செவ்வாய்க்கிழமை (22)அதிகாலை 4 மணியில் இருந்து வயிற்றோட்டம், வாந்தி, அதிக உஷ்ணத்துடனான காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏற்படவே அவதியுற்ற நிலையில் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அனுமதிக்கப்பட்ட நோயாளிகளிடம் விசாரணைகள் செய்த போது அவர்கள் அனைவரும் சுட்ட கோழி இறைச்சியுடன், இரவு உணவை சாப்பிட்டனர் என்றும் அந்த உணவை ஒரே கடையில் வாங்கியதாகவும் தெரிவித்துள்ளனர்.

அனுமதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஏற்பட்ட இந்த நிலைமைக்குக் குறிப்பிட்ட அந்த உணவு தான் காரணம் என்று வைத்தியர்களின் அறிக்கைகள் மற்றும் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டால் அந்த உணவுகளை விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரிகள் குழுவினருடன், உணவின் மாதிரிகளை எடுத்துப் பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர்.

இதேவேளை, மறு அறிவித்தல்வரை அந்த உணவகத்துக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளைக் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



## பால் நிலை அடிப்படையிலான வன்முறையால்

# பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிக்கும் இல்லம் தொடர்பான விழிப்புணர்வு!

(பழுவூரான்)

பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களை வைத்துப் பராமரிக்கும் தற்காலிக பெண்கள் பாதுகாப்பு இல்லம் தொழிற்பாடு சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் உதவி மாவட்ட செயலாளர் ஜீ. பிரணவன் மேற்பார்வைன் கீழ் மாவட்ட மகளீர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ். அருணாளினி ஒழுங்கு படுத்தலில் பழைய மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (22) இடம் பெற்றது.

பெண்கள் பணியகம், இலங்கை மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சின் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் மற்றும் ஓபர் சிலோன் (OfERR Ceylon) நிறுவனத்தின் அனுசரணையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

“நீதி வரையறுக்கட்டது – இலங்கையில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதிசெய்தல்” எனும் தொனிப்பொருளில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரச அதிபர், பாதிக்கப்பட்டவர்களை உரிய முறையில் பராமரித்துப் பாதுகாப்பதுடன் அவர்களை உளவியல் ரீதியாக அணுக வேண்டும்.– என்றார்.



இதன்போது பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட ஆலோசனை வழக்குதல், பெண்கள் தங்குமில்லங்களை நிர்வகிப்பதற்கான வழிகாட்டுதல்கள், தங்குமில்ல பணியாளர்கள் பின்பற்ற வேண்டிய விழுமியங்கள் மற்றும் நெறிமுறைகள் போன்ற பல விடயங்கள் தொடர்பாக துறைசார் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டது. ஓபர் நிறுவன வளவாளர் திருமதி இந்திரானி ராஜேந்திரன் இதன் போது தெளிவூட்டல்களை மேற்கொண்டார்.

இந்த நிகழ்வில் மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் திருமதி சுபா சதாகரன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்த திட்டத்தின் தொழில் நுட்ப இணைப்பாளர் திருமதி. சூஸ்மிதா தயாநந்தன், ஓபர் சிலோன் நிறுவன இணைப்பாளர் திருமதி. கிருசாநந்தி, துறைசார் நிபுணர்கள், வைத்தியர்கள், பொலிஸ் அதிகாரிகள், கல்வி திணைக்கள உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தில் சாய்ந்தமருது வடிகான்கள் துப்புரவு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பழைய சந்தை வீதியின் வடிகான்களைத் துப்பரவு செய்யும் பணி, மிக நீண்ட காலத்தின் பின்னர், பொது மக்களின் வேண்டுகோளுக்கு அமைய கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தில் அம்பாரை மாவட்ட கரையோர பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவின் வேண்டுகோளின் பெயரில் கல்முனை மாநகர சபையின் ஒத்துழைப்புடன் நேற்று செவ்வாய்க்கிழமை (22) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் ஒருங்கிணைப்பாளர் எம்.ஐ நஜீம், இணைப்புச் செயலாளர் ஆசிரியர் எஸ்.எம்.ஆரிப் ஆகியோரும் இந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

இந்தத் துப்புரவுப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிய கல்முனை மாநகர ஆணையாளர், பொறியியலாளர் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் பொதுமக்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

# மும்பை குண்டுவெடிப்பு வழக்கில் இருந்து 12 பேர் விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு



மும்பை ரயில் குண்டுவெடிப்பு வழக்கில் இருந்து 12 பேர் விடுதலையை எதிர்த்து மகாராஷ்டிர அரசு மேல்முறையீடு செய்துள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி மும்பை புறநகர் ரயில்களில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்ததில் 189 பேர் உயிரிழந்தனர். 800 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது தொடர்பாக 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த மும்பை சிறப்பு நீதிமன்றம் கடந்த 2015 ஆம் ஆண்டு 12 பேரும் குற்றவாளிகள் என தீர்ப்பு வழங்கியது. இவர்களில் 5 பேருக்கு மரண தண்டனையும் 7 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இதையடுத்து, குற்றவாளிகள் சார்பில் மும்பை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், குற்றவாளிகள் மீதான குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் நிரூபிக்க அரசுத் தரப்பு தவறிவிட்டதாகக் கூறி 12 பேரையும் விடுதலை செய்யுமாறு திங்கள் கிழமை உத்தரவிட்டது.

இந்நிலையில், மும்பை உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து மகாராஷ்டிர அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் நேற்று மேல்முறையீடு செய்யப்பட்டது. மாநில அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, மகாராஷ்டிர அரசின் மேல்முறையீட்டை அவசர மனுவாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் அமர்வில் கோரிக்கை வைத்தார்.

இதையடுத்து, இந்த மனு மீது எதிர்வரும் 25 ஆன் திகதி விசாரணை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டும்; தமிழ் நாடு அரசிடம் அண்ணாமலை அறிவுறுத்தல்



பெண்களின் பாதுகாப்பில் மாநில அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார். அவரை மூத்த அர்ச்சகர் நடராஜ சாஸ்திரி வரவேற்றார்.

அம்மனை தரிசித்துவிட்டு கோயிலுக்கு வெளிய வந்த அண்ணாமலை செய்தியாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கையில்,

“இந்தியாவின் துணை குடியரசுத் தலைவர் ஜெகதீப் தன்கர் இராஜினாமா செய்துள்ளார். அவருக்கு மார்ச் மாதத்திலேயே உடல் நலம் குன்றி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது அனைவருக்கும் தெரியும். அவர் நாட்டுக்கு சிறந்த சேவை செய்துள்ளார். மேற்கு வங்க ஆளுநராகவும் இருந்துள்ளார்.

தற்போது உடல் நலனில் அக்கறை செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இராஜினாமா செய்துள்ளார். மக்கள் நீதி மய்யம் கட்சியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும் ஆட்டோ ஓட்டுநருக்கும் தகராறு ஏற்படுகிறது. அதில் ஆட்டோ ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் ஒரு தலைபட்சமாக நடக்கக் கூடாது. அந்தப் பெண் தி.மு.க. கூட்டணிக் கட்சியான மக்கள் நீதி மய்யத்தில் இருக்கும் ஒரே காரணத்துக்காக ஆட்டோ ஓட்டுநரை கைது செய்துள்ளதாக கூறுகின்றனர்.

அந்தப் பெண், ஆட்டோ ஓட்டுநரை தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் பொலிஸ் நடுநிலையுடன் செயல்பட வேண்டும்.

எங்கள் கூட்டணிக்குள் எந்த குழப்பமும் இல்லை. தி.மு.க. அகற்றப்பட வேண்டும் என்பதில் அனைவரும் உறுதியாக உள்ளோம். தி.மு.க. கூட்டணி உடைவதற்கான அறிகுறி தென்படுகிறது.

தேர்தல் வரலாற்றில் தி.மு.கவுக்கு ஒரு மோசமான தேர்தலாக 2026 சட்டப் பேரவைத் தேர்தல் இருக்கும். பெண்களின் பாதுகாப்பில் மாநில அரசு கவனம் செலுத்தவேண்டும். தமிழ்நாட்டின் வளர்ச்சி என எல்லாவற்றிலும் தி.மு.க. அரசு கோட்டைவிட்டுள்ளது. களத்தில் தி.மு.கவின் தோல்வி தெளிவாகத் தெரிகிறது.”– என்றார்.

# எரிபொருள் சுவிட்ச் பரிசோதனையை நிறைவு செய்தது ஏர் இந்தியா நிறுவனம்



குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் கடந்த மாதம் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது. அதில் எரிபொருள் சுவிட்ச் ஓப் ஆகி இருந்தது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து போயிங் ட்ரீம் லைனர் விமானங்களின் இன்ஜின் எரிபொருள் சுவிட்சுகளை ஆய்வு செய்ய வேண்டும் என்று அனைத்து விமான நிறுவனங்களுக்கும் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டி.ஜி.சி.ஏ) உத்தரவிட்டது.

இந்நிலையில், “அனைத்து போயிங் விமானங்களிலும் எரிபொருள் கட்டுப்பாட்டு சுவிட்ச் அமைப்புகளை ஆய்வு செய்துவிட்டோம். இதில் எந்தப் பிரச்சினையும் கண்டறியப்படவில்லை” என ஏர் இந்தியா அதிகாரி தெரிவித்துள்ளார்.

# யுனெஸ்கோ உறுப்புரிமையிலிருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவிப்பு






ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோவின் உறுப்புரிமையில் இருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு எதிரான நிலைப்பாடு மற்றும் பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதன் காரணமாகவே, இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

யுனெஸ்கோவின் தொடர்ச்சியான ஈடுபாடு, அமெரிக்காவின் தேசிய நலன்களைப் பூர்த்தி செய்யவில்லை என்று, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் டாமி புரூஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் 2017 ஆம் ஆண்டு தமது முதலாவது பதவிக் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பிலிருந்து விலகுமாறு உத்தரவிட்டிருந்தார்.

எனினும், அதனையடுத்து அமெரிக்காவில் ஆட்சிக்கு வந்த ஜோ பைடன், அந்த உறுப்புரிமையை மீண்டும் நிலைநாட்ட நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்த நிலையில், மீண்டும் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ள ட்ரம்ப், ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பிலிருந்து விலகுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# காசாவில் 3 நாள்களில் 21 சிறுவர்கள் உணவின்றி உயிரிழப்பு; ஐ.நா. தகவல்

காசாவில் மூன்றே நாள்களில் 21 சிறுவர்கள் பட்டினி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக பலியாகியுள்ளனர் என ஐ.நா தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் தீவிர இராணுவ நடவடிக்கை காரணமாக பாலஸ்தீனத்தின் காசாவில் உணவு பற்றாக்குறை மற்றும் மனித அத்துமீறல்கள் அரங்கேறுவது தொடர்கிறது.

இராணுவ நடவடிக்கை காரணமாக உறவு, உடமை என அனைத்தையும் இழந்து நிற்கும் காசா வாழ் மக்களுக்கு உண்ண முறையான உணவு கூட கிடைப்பதில்லை. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஒரே நாளில் 81 பேர் உயிரிழந்தனர். அதில் 31 பேர் உதவி தேடி சென்றவர்கள். இதை மத்திய கிழக்கு பகுதியில் பிரபலமாக உள்ள செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான மோதல் கடந்த 2023 இல் ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கியது. அன்று முதல் ஜூலை 22, 2025 வரையில் இந்த மோதலில் சுமார் 59,106 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர். போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இஸ்ரேல் தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இந்த சூழலில்தான் காசாவில் பட்டினி காரணமாக ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக நஸர்



மருத்துவமனை தெரிவித்துள்ளது.

உதவி மையங்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதலை கண்டித்து காசாவில் களப் பணியில் உள்ள பத்திரிகையாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்தனர்.

காசாவுக்கு தேவையான உதவிகளை வழங்கும் வகையில் பிரத்யேக சிறப்பு வழித்தடத்தை ஏற்படுத்தும் வகையில் கட்டாரில் ‘இஸ்ரேல் – ஹமாஸ்’ இடையே பேச்சுவார்த்தை நடத்தவும் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

காசாவில் சுமார் 20 லட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். மோதல் காரணமாக அங்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. அதே நேரத்தில் உதவி முகாம்களை மக்கள் அணுக முயற்சிக்கும் போது அவர்கள் இஸ்ரேல் தாக்குதலால் கொல்லப்படுகின்றனர். மொத்தத்தில் காசா பகுதி பூலோக நரகமாக மனிதர்களுக்கு மாறியுள்ளது.

இந்நிலையில், காசாவின் மிகப் பெரிய மருத்துவமனையான அல்–ஷிஃபாவின் இயக்குனர் முகமது அபு சால்மியா, “காசாவில் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பட்டினியால் 72 மணி நேரத்தில் 21 குழந்தைகள் இறந்துள்ளனர்” என தெரிவித்தார்.

காசாவில் உள்ள உலக சுகாதார மையத்தின் அமைப்புகளை இஸ்ரேல் தாக்கியுள்ளது. இதில் சுமார் 15 பேர் உயிரிழந்தனர் என களத்தில் இருந்து வரும் தகவல்கள் உறுதி செய்துள்ளன.

வெடிகுண்டு சப்தம், குண்டுவெடிப்பு, நெருப்பு, புழுதி, புகை, தாக்குதலில் அங்கும் இங்கும் சிதறிக்கிடக்கும் மனித உடல்களின் பாகங்களுக்கு மத்தியில் தான் தங்களது குடும்பம் மற்றும் குழந்தைகளுடன் வசித்து வருவதாக காசாவில் முகாம்களில் தஞ்சம் புகுந்த மக்கள் தங்களது வாழ்க்கை சூழலை பகிர்ந்துள்ளனர். மக்கள் தஞ்சம் அடைந்துள்ள முகாம்கள், வசித்து வரும் கூடாரங்கள் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்துகிறது.

காசாவில் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பட்டினியால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக ஐ.நா பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.



# பதவி விலகுகிறார் ஜப்பானிய பிரதமர்

ஜப்பானியப் பிரதமர் ஷிகெரு இஷிபா ஓகஸ்ட் மாத இறுதிக்குள் தனது பதவி விலகலை அறிவிப்பார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரதமர் தலைமையிலான ஜப்பானின் ஆளும் கூட்டணி, நாட்டின் மேல் சபையில் பெரும்பான்மையை இழந்தமையால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

புதன்கிழமை 23/07/2025

## கனேடியப் பெண் இலங்கையில் கைது



C2



# கனடாவுக்கு வருபவர்களைவிட வெளியேறுபவர்கள் அதிகமாக இருக்கவேண்டும்; அரசியல்வாதி கருத்து

கனடாவுக்கு வருபவர்களை விட கனடாவிலிருந்து வெளியேறுபவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கவேண்டும் என கனடாவின் பிரபல அரசியல் கட்சித் தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

கனடாவில் சர்வதேச மாணவர்கள் தொடர்பில் தொடர்ந்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், அது தொடர்பில் கனடா அரசு நடவடிக்கை ஒன்றை எடுக்க உள்ளது.

கனடாவில் கனேடிய இளைஞர்கள் சந்திக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், வீடுகள் தட்டுப்பாடு ஆகிய பிரச்சினைகளுக்கு சர்வதேச மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பே காரணம் என கன்சர்வேட்டிவ் கட்சியினர் உட்பட பலரும் விமர்சனம் முன்வைத்து வருகிறார்கள்.

கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவரான Pierre Poilievre அடுத்த சில ஆண்டுகளில், கனடாவுக்கு வருபவர்களைவிட கனடாவிலிருந்து வெளியேறுபவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

C2

## கறுப்பு ஜீலை ஆவணப்படுத்தல்:

# பாதிக்கப்பட்டவர்கள் தொடர்புகொள்ள கனடிய தமிழர் பேரவை வேண்டுகோள்




கறுப்பு ஜீலை குறித்த ஆவணப்படுத்தலில் ஈடுபட்டுள்ள கனடிய தமிழர் பேரவை, பாதிக்கப்பட்டவர்கள் விபரங்கள் தெரிந்தவர்கள் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்–துள்ளது..

இதுதொடர்பில் கனடிய தமிழர் பேரவை மேலும் மேலும் குறிப்பிடுகையில்,

“கறுப்பு ஜீலை “83 நிகழ்ந்து இந்த ஆண்டுடன் 42 வருடங்கள்.

தமிழர்களை குறிவைத்து திட்டமிட்ட இன அழிப்பு இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் நேரடியாக இனப்படுகொலைகளாக கட்டவிழ்க்கப்பட்ட சோகம் நிகழ்ந்தது கறுப்பு ஜீலை தினங்களில் என்பதை வரலாறும் தமிழ் மக்களும் என்றும் மறந்துவிடப்போவதில்லை.

கனடியத் தமிழர் பேரவை 2008 ஆம் ஆண்டில் இருந்து கறுப்பு ஜீலை கொடூரங்களை கண்ணுற்று தப்பித்து வந்தவர்களைத் தேடி அவர்களிடம் இருந்து சாட்சியங்களை ஒலி, ஒளிப் பதிவுகளாக ஆவணப்படுத்தி வருகின்றது. இது நம் வரலாற்றை திரிபுபடுத்தாமல் கடத்த மிக முக்கியமான ஆவணப்படுத்தலாகும்.

கறுப்பு ஜீலையில் அழியாத நினைவுகளை ஆவணப்படுத்தும் முயற்சி இது. அனுபவித்து அழுது மனத்திற்குள் ரணங்களாக பூட்டி

C2




# ஹமில்டன் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

கனடாவின் ஹமில்டன் நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பார்டன் தெரு ஈஸ்ட் மற்றும் பிரேசர் அவென்யூ பகுதியில் உள்ள பஸ் காத்திருப்பு நிலையம் அருகே அதிகாலை 1.50 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்கு ஒருவர் உயிருக்கு ஆபத்தில்லாத வகையில் காயமடைந்த நிலையில் காணப்பட்டார் எனவும், அவருக்கு உடனடி மருத்துவ உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான ஒரு வாகனம், பிரேசர் அவென்யூ வழியாக தெற்குப் பக்கம் அதிக வேகத்தில் தப்பியோடியதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான தகவல்கள் அல்லது கேமரா, சி.சி.டி.வி, டாஷ் கேம் பதிவுகள் உள்ளவர்களிடம், ஹாமில்டன் பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

# கனேடியப் பெண் இலங்கையில் கைது

கனடாவில் இருந்து தோஹா வழியாக கத்தார் ஏர்வேஸ் விமானத்தில் இலங்கை சென்ற 37 வயது கனேடிய பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கைது நடவடிக்கை கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று அதிகாலை 2:50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து 18,123 கிராம் ஹஷீஷ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருகோட தெரிவித்துள்ளனர்.



இலங்கை சுங்கத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள், அந்தப் பெண்ணின் பயணப் பொதிகளை சோதனையிட்ட போது, சுமார் 181 மில்லியன் ரூபாய் மதிப்புடைய ஹஷீஷ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான முதற்கட்ட விசாரணைகளை இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரும், கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களும் மேலதிக விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக போலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக சீவலி அருகோட தெரிவித்துள்ளார்.

---

**பாதிக்கப்பட்டவர்கள்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருக்கும் அனுபவங்களை எம் இனத்தின் கடந்துவந்த வலிகளின் சாட்சியமாக மாற்றி நம் தலைமுறையினருக்கு கொடுத்து செல்ல வேண்டியது எம் பொறுப்பு.

இந்த செயற்பாட்டை தொடர உங்களின் பங்களிப்புக்களும் எங்களுக்கு மிக முக்கியமானது. நீங்கள் கறுப்பு ஜுலையில் நேரடியாக பாதிக்கப்பட்டவராக இருந்தால் அல்லது உங்களிற்கு தெரிந்த யாரேனும் நேரடி சாட்சியங்களாக இருந்தால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உயிர் இழப்புகளையும், உடல் வடுக்களையும், உடமை அழிப்புக்களையும், பாதிக்கப்பட்டவர்களின் குரலிலேயே ஆவணப்படுத்தி வைப்போம்.

காலங்கள் கடந்தாலும் மீண்டவர்கள் மறைந்தாலும் சாட்சியங்கள் என்றும் பதியப்பட்டிருக்க வேண்டும். எம் வரலாறுக்கும், இனமாக நாம் கண்ட வலிகளுக்கும் இவை என்றும் அழியாத ஆதாரங்களாக இருக்கும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**கனடாவுக்கு வருபவர்களைவிட...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில், கனடாவுக்குக் கல்வி கற்க வரும் மாணவர்கள், முறைப்படி நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெறாமல், புகலிடம் கோரி விண்ணப்பிப்பதன்மூலம் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெறுவது அதிகரித்துவருகிறது.

ஆக, சர்வதேச மாணவர்கள் விடயத்தில், மீளாய்வு ஒன்றை நடத்த, கனடாவின் ஃபெடரல் ஆடிட்டர் ஜெனரல் திட்டமிட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்த மீளாய்வின் முடிவுகள், 2026ஆம் ஆண்டு, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக ஆடிட்டர் ஜெனரலான முயசநெ ஊழபயெ அலுவலக செய்தித்தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

திட்டம் ஆரம்ப நிலையில் இருப்பதால், மீளாய்வில் என்னென்ன விடயங்கள் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படப் போகின்றன என்பது போன்ற விவரங்களை இப்போதைக்கு வெளியிட இயலவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




# கனடாவில் குற்றச் செயல்கள் 4 வீதத்தால் குறைந்துள்ளன

கனடாவில் பொலிஸால் பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் அளவு கடந்த ஆண்டில் 4 வீதம் குறைந்துள்ளதாக கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது கடந்த மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து ஏற்பட்ட உயர்வுக்குப் பின்னர் பதிவாகியுள்ள வீழ்ச்சியாகும். 2024 ஆம் ஆண்டு, குற்றச் செயல்கள் குறைந்தளவில் பதிவாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சொத்துக் குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் குற்றங்கள் போன்றவையைக் கொண்ட குற்றத் தீவிரத்தன்மை குறியீடு கடந்த ஆண்டு 6 வீதமாக குறைந்துள்ளது.

இது 2021 முதல் 2023 வரை 9 வீதமளவில் உயர்ந்திருந்தது. மேலும், வன்முறைக் குற்றத் தீவிரத்தன்மை குறியீடு கடந்த ஆண்டில் 1 வீதம் மட்டுமே குறைந்தது.

இதன் தாக்கம் மொத்த குற்றக் குறியீட்டில் குறைவாக இருந்தது. கடந்த மூன்று ஆண்டுகளில் இது 15 வீத உயர்வினை பதிவு செய்திருந்தது.

# மூதாட்டியின் கொலை வழக்கில் சிறுவன் நீதிமன்றில் முன்னிலை




டொராண்டோவில் கடந்த வாரம் குத்திக்கொலை செய்யப்பட்ட 71 வயது மூதாட்டியின் மரணத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 14 வயது சிறுவன் ஒருவர் மீது இரண்டாம் நிலை கொலை குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளார்.

சிறுவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார்.

டொராண்டோ நீதிமன்றத்தில் காணொலி தொடர்பு மூலம் குறித்த நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை, டொராண்டோவின் பார்க்வே பொரஸ்ட் ட்ரைவ்ீயசமறயல குழசநளவ னுசளைந மற்றும் ஷெப்பர்ட் Sheppard Avenue East அருகிலுள்ள வர்த்தக வளாகத்தில் இடம்பெற்ற கத்தி குத்து தாக்குதல் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், 71 வயதான மூதாட்டி ஒருவர் கத்திக்குத்து காயங்களுடன் கிடப்பதை கண்டனர். அவர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும், அங்கு உயிரிழந்தார்.

71 வயதான ஷானாஸ் பெஸ்டோஞ்சி என்ற பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். அவர் தனது வாகனத்தில் பொருள்களை ஏற்றிக் கொண்டிருந்தபோதே தாக்குதல் நடந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் முதலில் "ஊக்கமற்ற தாக்குதலாக" வரையறுக்கப்பட்டிருந்தது.

ஆனால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணை, சி.சி.டி.வி. காட்சிகள் மற்றும் சாட்சிகளின் தகவல்களின் அடிப்படையில், இது ஒரு கொள்ளை முயற்சியின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு ஜுலை 28 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.